# வட நாட்டினரிடம் நாட்டுப்புறக் கலைகளைப் பரப்பும் தமிழ் அமைப்பு



அவ்வை தமிழ்ச் சங்க நிகழ்ச்சியில் நடைபெற்ற பரத நாட்டியம்.



ராஜஸ்தானிய நடனம்.

வே. சுந்தரேஸ்வரன்

**புது தில்லி, ஜூலை 15:** தொன்மை மிக்க தமிழக நாட்டுப்புறக் கலைகளை வட இந்தியர்களிடம் கொண்டு செல்லும் அரிய பணியில் ஈடுபட்டு வருகிறது அவ்வை தமிழ்ச் சங்கம்.

வள்ளுவர் பெயரையும், தலைவர்கள் பெயரையும் தாங்கி தமிழைப் பரப்பும் சங்கங்கள் பல இருக்க, தமிழ் மூதாட்டி ஔவையின் பெயரைத் தாங்கி கலை, கலாசாரப் பணியில் ஈடுபட்டு வருகிறது இவ்வமைப்பு.

மிக வேகமான வளர்ச்சியைப் பெற்றுள்ள உத்தரப் பிரதேச மாநிலம் நொய்டா நகரம், 15 ஆண்டுகளுக்கு முன்பு தொழிற்சாலைப் பகுதியாக மட்டுமே இருந்தது.

நொய்டாவில் குடியிருப்புகள் முளைக்கத் தொடங்கிய காலக்கட்டத்தில் செக்டார் 37, 27, 34, 19 ஆகியவற்றில் அதிகம் குடியேறியவர்கள் தமிழர்கள்தான். இப்போது சுமார் 2 ஆயிரம் தமிழ்க் குடும்பங்கள் இங்கு உள்ளன.

நொய்டா நகரவாசிகளிடம் தமிழ்க் கலைகளை வளர்க்கவும், தமிழ் ஆர்வம் நீர்த்துப் போகாமல் இருக்கவும் 2003-ம் ஆண்டில் அப்பகுதியைச் சேர்ந்த காயத்திரி, ரவி, பிரகாஷ் ஆகிய மூவரும் சேர்ந்து ஆரம்பித்த அமைப்புதான் இது.

தொடக்கத்தில் இந்த அமைப்பினர் கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள் மூலம் தமிழ்க் கலாசாரத்தைக் குழந்தைகளிடம் வளர்க்கும் பணியை மேற்கொண்டனர். அமைப்பின் நிர்வாகிகள் சிலர் வெளிநாடு செல்ல நேர்ந்ததால் பணியில் சிறிது தொய்வு ஏற்பட்டது.

இந் நிலையில், 2008-ம் ஆண்டில் இந்த அமைப்புக்கு புத்துயிரூட்டும் பணியில் என்.சங்கரன், கிருஷ்ணமாச்சாரி, எஸ். சுவாமிநாதன், வி.பி.சாமி, சந்தோஷ் ஆகிய 5 பேர் ஈடுபட்டனர். முதல்கட்டமாக 'செய்தி மடல்' எனும் பெயரில் தினம் ஒரு குறள், பொன்மொழி ஆகியவற்றை மின்னஞ்சல் மூலம் தங்களது அமைப்பின் உறுப்பினர்களுக்கு அனுப்பத் தொடங்கினர்.

இதற்கு நல்ல வரவேற்பு கிடைக்கவே அன்றாட முக்கியச் செய்திகள், தமிழ் எழுத்தாளரின் இலக்கியக் கட்டுரைகள் என பல தளங்களுக்கு மின்னஞ்சலை விரிவுபடுத்தி வருகின்றனர். ஆண்டுதோறும் கலை, கலாசார விழாக்களை நடத்தி தமிழ்க் கலைகளை வட நாட்டினரிடம் கொண்டு செல்வது மட்டுமன்றி பிற மாநிலத்தவரின் நாட்டுப்புறக் கலைகளை வளர்க்கவும், ஒற்றுமைப்படுத்தவும் களப் பணியாற்றுகின்றனர் இவ்வமைப்பினர்.

"மாநிலம் விட்டு மாநிலம் வந்து பல ஆண்டுகளாக தில்லியில் தங்கியிருக்கும் தமிழர்கள் அனைவரும் நண்பர்களாக உள்ளோம். உறவை விட்டு இங்கு வந்துள்ள தமிழர்கள், நண்பர்கள் என்ற வட்டத்தைத் தாண்டி உறவினர்கள்போல் ஒன்றிணைய வேண்டும் என்பதே எங்கள் அமைப்பின் நோக்கம்" என்றார் அவ்வை தமிழ்ச் சங்கத்தின் செயலர் கிருஷ்ணமாச்சாரி.



கிருஷ்ணமாச்சாரி

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த தமிழர்கள் தில்லி மற்றும் சுற்றியுள்ள பல பகுதிகளிலும் பல ஆண்டுகளாக குடியிருந்து வருகிறோம். அவர்களது குழந்தைகளுக்கு தமிழ் தெரிந்திருந்தாலும் ஹிந்தி மொழியில்தான் பேசுகின்றனர். அது அவசியமாகவும் உள்ளது.

அதேவேளை, தமிழை அவர்கள் மறந்துவிடாமல் இருப்பதற்காகத்தான் பல்வேறு கலை, கலாசார நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறோம். தமிழ் தொடர்பான செய்தி, தகவல்களை மின்னஞ்சல் மூலம் பலருக்கும் அனுப்பி வருகிறோம். 3 ஆண்டுகளுக்கு முன்பு இப்பணியை ஆரம்பித்தபோது வெறும் 30 சந்தாதாரர்களே எங்கள் அமைப்பில் இருந்தனர். இன்றைக்கு 3 ஆயிரம் பேர் வரை மின்னஞ்சல் தொடர்பில் உள்ளனர். இது எங்கள் முயற்சியை ஊக்குவிப்பதாக உள்ளது. தமிழ்நாடு என்றால் ராமேசுவரம், இட்லி, தோசை என்றுதான் வட நாட்டினருக்கு நினைப்பு வருகிறது. தமிழகத்தின் தொன்மையான நாட்டுப்புறக் கலைகள் குறித்த விழிப்புணர்வு அவர்களிடம் இல்லை. நமது மண்ணின் கலைகளை அவர்கள் அறியச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் தமிழ்நாடு கலாசாரத் திருவிழாவை நடத்துவது என்று 3 ஆண்டுகளுக்கு முன்பு முடிவு செய்தோம்.

இதையடுத்து தமிழக அரசை அணுகி நிகழ்ச்சிக்கு நாட்டுப்புறக் கலைஞர்களை அனுப்புமாறு கேட்டோம். அரசும் உதவியது. முதல் முறையாக 2009 ஜனவரி 26-ம் தேதி நொய்டா கிரேட் இந்தியா ஷாப்பிங் மால் வளாகத்தில் பெரிய அளவில் தமிழ்நாடு கலாசாரத் திருவிழாவை மூன்று நாள் நடத்தினோம்.

சுமார் 1 லட்சம் பேர் கூடும் இந்த மாலில் தமிழ்நாட்டின் நாட்டுப்புறக் கலைகளான காளியாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், கரகாட்டம், மானாட்டம், மயிலாட்டம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளை நடத்தினோம். பலத்த வரவேற்பு கிடைத்தது.

உடல் உறுப்பு தானம் செய்ய சுமார் 1,000 பேர் வரை விருப்பம் தெரிவித்து எங்களிடம் பதிவு செய்துள்ளனர். பலர் ரத்த தானம் அளிக்கவும் முன் வந்துள்ளனர்.

இலக்கியம், சமூகப்பணி, இசை ஆகியவற்றில் சிறப்பாகப் பணியாற்றுவோருக்கு கடந்த ஆண்டு முதல் விருது வழங்கி வருகிறோம். தில்லி தமிழ்க் கல்விக் கழகப் பள்ளியை நிறுவ காரணகர்த்தாவாக இருந்த பி.எச்.எஸ். ஐயருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கியதைப் பெருமையாக நினைக்கிறோம்.

வரும் ஆண்டில் மாற்றுத் திறனாளி கலைஞர்களுக்கும் மேடை வாய்ப்பு அளிக்கத் திட்டமிட்டுள்ளோம். அதே போன்று, தொன்மைமிக்க நாட்டுப்புறக் கலைகளைக் கற்றுக் கொடுக்கும் ஒரு மையத்தை தில்லியில் நிறுவ தமிழக அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளோம். அதே போன்று, உலகின் பல்வேறு இடங்களிலும் உள்ள தமிழ் அமைப்புகளின் முகவரி மற்றும் தொலைபேசி எண்களைச் சேகரித்து 'டைரக்டரி' வெளியிடவும் திட்டமிட்டுள்ளோம். இதன்மூலம் தமிழர்கள் ஓரிடத்தில் இருந்து அறிமுகமில்லாத மற்றொரு இடத்துக்கு வேலைநிமித்தமாகவோ, படிப்புக்காகவோ செல்லும்போது அந்த அமைப்புகள் மூலம் தேவையான உதவியைப் பெற முடியும் என்று நம்புகிறோம்.

எங்கள் அமைப்பைப் பொறுத்த மட்டில் உறுப்பினர்களிடம் சந்தா கட்டாயப்படுத்துவதில்லை. மின்னஞ்சல் (avvaitamilsangam@gmail.com) மூலம் செய்தி மடலை படிக்கும் ஒவ்வொருவரும் எங்கள் சந்தாதாரர்களாகவே நாங்கள் பார்க்கிறோம்.

முதன்முதலில் நாம் பள்ளி செல்லும்போது படிப்பது 'அறம் செய்ய விரும்பு', 'ஆறுவது சினம்' என்ற ஔவையாரின் ஆத்திச்சூடி பாடல்தான். அதனால்தான் எங்கள் அமைப்புக்கு ஔவையின் பெயரை வைத்தோம் என்றார் அவர்.

இச்சங்கத்தின் தலைவராக என்.சங்கரன், பொருளாளராக எஸ்.சுவாமிநாதன், இணைச் செயலராக வி.பி.சாமி, இணையதள செயல்பாடுகளை கவனிப்பவராக எஸ்.சந்தோஷ் ஆகியோர் உள்ளனர்.

இச்சங்கம் பற்றிய விவரங்களை அறிய http://www.avvaitamilsangam.org என்ற வலைத்தளத்தைப் பார்வையிடலாம்.